(அ) செங்கம் தொகுதி, செங்கம் வட்டம், இராமாபுரம் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி, செங்கம் வட்டத்திலுள்ள இராமாபுரம் கிராமத்தில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையத்திற்குப் புல எண் 138/1-ல் இடம் தேர்வு செய்யப்பட்டு வருடாந்திர செயல்பாடுகள் மற்றும் திட்டமிடல் திட்டத்தின்கீழ் இவ்வாண்டு புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நிரந்தர முதல்வர், மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். இராமபுரம் கிராமத்தில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதியின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 262, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

262—

அரசு கலைக் கல்லூரி

***38199— திரு. எம்.கே. செல்வராஜு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2015 செப்டம்பர் 15]

சேலம் மாநகரப் பகுதியில் கூடுதலாக ஓர் அரசு கலைக் கல்லூரி துவக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அரசு கல்லூரிகள், அரசு உறுப்புக் கல்லூரிகள், அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்லூரிகள் 726 உள்ளன. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 36 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற சேலம் மாநகரத்தினைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே அங்கு நான்கு கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. சேலம்-7 இல் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. அதுபோல் சேலம்-8 இல் பெண்களுக்கென ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் சாரதா அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. மேலும், சேலத்தில், சவுடேஸ்வரி அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஆகவே, சேலம் மாநகர் மாணவர்கள் உயர் கல்வி பெறுவதற்கான வசதி வாய்ப்புகள் அங்குள்ள கல்வி நிறுவனங்களில் இருக்கின்றன. ஆகவே, அங்கே புதியதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு+ அவர்கள்.

திரு. எம்.கே. செல்வராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். உலகில் எல்லோருக்கும் தாய் மொழி உண்டு, ஆனால் 10 கோடி தமிழர்களுக்குத் தாய் தான் மொழி என்பதற்கு அடையாளம் அம்மா என்ற மூன்றெழுத்துச் சொல். (மேசையைத் தட்டும் ஒலி) உலகனைத்தின் உயிரோட்டம் காத்து, உலகத் தரத்திலான கல்விக்கு மடிக் கணினி தந்து, தாலிக்குத் தங்கம்

தந்து, தாய்க் குலத்தை இமை கண்ணைக் காப்பது போல் காக்கின்ற எங்கள் அன்னைத் திருமகள், எங்கும் நிறைந்திருக்கும் மக்களின் முதல்வர், அம்மா அவர்கள் முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி) முக்கடல் சூழ்ந்த பாரதத்தின் மூன்றாம் பெரும் இயக்கத்தை வழிநடத்தும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அஞ்சாத மன உறுதி, விடா முயற்சி, காலம் தாழ்த்தாத முடிவு, வாரி வழங்கும் வள்ளல் குணம், ஆழ்ந்த அறிவாற்றல் ஆகிய குணநலன்களை ஒருங்கே பெற்றுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சேலம் மாநகரில் 150 ஆண்டுகள் பழமையும் பெருமையும் வாய்ந்த இருபாலர் பயிலும் ஓர் அரசு கலைக் கல்லூரியும், மகளிர் மட்டும் பயிலும் ஓர் அரசு மகளிர் கலைக் கல்லூரியும் உள்ளது. இருபாலர் பயிலும் அரசு கலைக் கல்லூரியில் மொத்தம் 6,400 மாணவ மாணவிகள் படிக்கின்றனர். சேலம் நகராட்சி, மாநகராட்சியாகி தற்போது 20 வருடங்கள் ஆகின்றன. இங்குள்ள மக்கள்தொகை 8½ இலட்சத்திற்கும் மேலாக உள்ளது. இங்குள்ள இரண்டு அரசு கலைக் கல்லூரிகளிலும் பயில இடம் கிடைக்காதவர்கள் தனியார் கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. மேலும், கல்லூரியில் படிக்க இடம் கிடைக்காதவர்கள் வேறு மாவட்டத்திற்குச் சென்று பயில வேண்டிய சூழ்நிலையும் உள்ளது.

தமிழகமே என் குடும்பம், தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள், தமிழக மக்களின் நலனே என் நலன், என்னும் மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணத்திற்கேற்ப, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் சேலம் மாநகரில் சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டு, கூடுதலாக ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினைத் துவக்கினால், சேலம் மாநகரில் உள்ள மாணவ, மாணவிகள் படிக்க ஏதுவாக இருக்கும். எனவே, இதனை மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அரசு கலைக் கல்லூரியினை அமைக்க வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2015 செப்டம்பர் 15]

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி பெறவேண்டும் என்று என்பதற்காக ஒரு காலத்தில் மாநகரப் பகுதியை நோக்கி மாணவர்கள் பயணம் செய்து கொண்டிருந்தனர். அந்த நிலையை மாற்றி, கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய ஏழையெளிய மாணவர்கள் உயர் கல்வியை எளிதில் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு உயர் கல்வி நிலையங்களைக் கிராமப்புறங்களுக்குக் கொண்டு சென்ற பெருமை தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் சொல்வதற்குக் காரணம் ஏற்கெனவே தமிழகத்தில் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய ஏழையெளிய மாணவர்கள் உயர் கல்வி பெறவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமப்புறங்களில் அதிகமான கல்லூரிகளைத் துவக்கியிருக்கிறார்கள். 4 பொறியியல் கல்லூரிகள், 11 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 38 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஆக மொத்தம் 53 கல்லூரிகளையும் கிராமப்புறங்களில் துவங்கி அங்கே மாணவர்களின் பொருளாதார சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, மாணவர்கள் உயர் கல்வி பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அந்தவகையில், சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் தங்காயூர் கிராமத்தில் புதிய கல்லூரியினைத் துவங்கி, கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய மாணவர்கள் உயர் கல்வி பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு 7¼ கோடி ரூபாய் செலவில் கட்டடங்கள் கட்டப்பட்டு சமீபத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அந்தக் கல்லூரிகளில் மாணவர்கள் நன்றாகப் படித்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய 914 ஏழையெளிய மாணவ, மாணவிகள் உயர் கல்வி பெற்று வருகிறார்கள்.

முற்பகல் 10-40

அந்த வகையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலம் உயர் கல்வித் துறைக்குப் பொற்காலம். கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மாணவர்கள் உயர் கல்வி பெறவேண்டுமென்ற நோக்கத்தோடு இதுபோன்ற நிலையங்களை உருவாக்கி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

சேலத்தில் இருக்கக்கூடிய அந்தக் கல்லூரியிலே கிட்டத்தட்ட 5,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகிறார்கள் என்று சொன்னார்கள். அங்கே இருக்கக்கூடிய மாணவர்கள் உயர் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் கூடுதலாக பாடப் பிரிவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதுவும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க Political Science, Human Rights அதாவது மனித உரிமை போன்ற பாடப் பிரிவுகளில் எல்லாம் அந்தக் கல்லூரியிலே மாணவர்கள் படித்துக்கொண்டு வருகிறார்கள். சொல்லப்போனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சேலம் அரசினர் கல்லூரியில்தான் படித்தார்கள். நானும் அதே கல்லூரியிலேதான் படித்தேன் என்ற பெருமையும் எனக்கு இருக்கிறது. அந்த வகையிலே சேலத்திலே, மாணவர்கள் உயர் கல்வி பெறவேண்டுமென்ற நோக்கத்தோடு பல்வேறு பாடப் பிரிவுகளை பல்வேறு கல்வி நிலையங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்துவருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, எதிர்காலத்தில் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜ் அவர்கள்.

திரு. எம்.கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், அரசு கலைக் கல்லூரியில் போதுமான இடவசதி இல்லாததால் சேலம், அரசு கலைக் கல்லூரியில் வகுப்பறைகளை கூடுதலாகக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், வீரபாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.கே. செல்வம் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், சேலம் மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வெங்கடாஜலம் அவர்களின்

2015 செப்டம்பர் 15]

தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜ் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் அங்கே கட்டடம் நல்ல முறையில் கட்டப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அதை நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், நானும், திறந்து வைத்திருக்கிறோம். மேலும், அங்கே கூடுதல் கட்டடங்கள் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்த வகையிலே, அவருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, வருகின்ற காலகட்டத்தில் நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 263, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

263—

கூட்டுறவு வங்கிக் கட்டடம்

***53367—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி மற்றும் புதுவயல் ஆகிய இடங்களிலிருக்கும் சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளைகள் புதுவயல் மற்றும் காரைக்குடி ஆகிய இடங்களில் தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. இதில் புதுவயல் கிளைக்கு ரூபாய் 3.19 இலட்சம்